**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**
**நாள்: 16.06.2026**
**அரசு தரப்பு சாட்சி** : 23 (LW24)

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | தொழில் | |
| தந்தை பெயர் | கார்மேகம் | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A2 to A4 ஆஜர். A1 இறப்பு )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கமுதி உட்கோட்ட அபிராமம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2012 ம் தேதியன்று பரமக்குடி உட்கோட்ட எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது, அன்று காலை 08.00 மணி முதல் மறுநாள் 03.10.2012 ம் தேதி காலை 08.00 மணி வரை நிலைய பாராவாக நியமிக்கப்பட்டு தொடர்ந்து பணியில் இருந்து வந்தேன். இரவு 09.40 மணியளவில் நிலைய சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார் அவர்கள் இரவு ரோந்து செல்வதால் நிலைய பொதுநாள்குறிப்பை என் வசம் ஒப்படைத்து சென்றதை பெற்றுக்கொண்டு தொடர்ந்து நிலைய பாராவில் இருந்து வந்தேன்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:22 +0530

மறுநாள் 03.10.2012ம் தேதி அதிகாலை 05.30 மணியளவில் பரமக்குடி உட்கோட்ட குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் முனியசாமி மற்றும் குற்றப்பிரிவு காவலர்கள் அசோக்குமார், நீதி, தெய்வேந்திரன், ஞானசேகரன் ஆகியோர்கள் நிலையத்திற்கு ஒரு நபரை கொண்டு வந்தார்கள். நான் சார்பு ஆய்வாளர் முனியசாமியிடம் என்னவென்று கேட்டபோது, பரமக்குடி நகர் காவல் நிலைய வழக்கில் சம்மந்தப்பட்ட சந்தேக நபர் என்றும், மதுரை சேர்ந்த இராமனுஜம் மகன் வெங்கடேசன் என்றும், பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் கழிப்பறை வசதி இல்லாத காரணத்தினால், காவல் ஆய்வாளரின் உத்தரவின் பேரில் எமனேஸ்வரம் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்ததாக சொன்னார்.

பின்பு, காவல் நிலையத்தில் கீழ்தளத்தில் நீதி, அசோக்குமார், தெய்வேந்திரன் ஆகியோர்கள் வெங்கடேசனை பார்த்துக்கொண்டு, மற்றவர்கள் வெளியில் சென்றுவிட்டார்கள். காலை 07.00 மணிக்கு மேல் நிலைய ரோல்கால் நடத்தப்படுவதால் தலைமைக்காவலர் நாகநாதன், முகமது செரிப், SSI செல்லமணி, முத்துமணி ஆகியோர்கள் வந்தபிறகு நாகநாதன் நிலையத்தில் இருந்த வெங்கடேசனை பற்றி நிலைய சார்பு ஆய்வாளரிடம் போனில் தகவல் தெரிவித்தார். பின்னர் 08.00 மணியளவில் ரோல்கால் முடிக்கப்பட்டு நிலைய காவலர்களுக்கு அலுவல் நியமிக்கப்பட்டார்கள்.

பின்பு முதல் நிலை காவலர் முத்துமணி என்னை பாரா பொறுப்பில் இருந்து விடுவித்ததால் நான் ஓய்விற்கு சென்றுவிட்டேன். மேலும் நிலைய எழுத்தர் இரண்டு நாட்கள் தற்செயல் விடுப்பில் சென்றுவிட்டபடியால் பாராவை மாற்றுவதற்கு ஆள் இல்லாத காரணத்தினால் சார்பு ஆய்வாளர் சொன்னதன் பேரில் 11.00 மணிக்கு நிலையம் வந்து முத்துமணியை பாரா பொறுப்பில் இருந்து விடுவித்து, நிலைய எழுத்தர் நிலைய பதிவேடுகளை பார்த்துக்கொண்டு இருந்து, சுமார் 12.00 மணியளவில் குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் மற்றும் காவலர்கள் மாடியில் இருந்த வெங்கடேசனை கை தாங்கலாக அழைத்து வந்தார்கள். நான்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:24 +0530

முனியசாமியிடம் என்னவென்று கேட்க வெங்கடேசனுக்கு உடல்நிலை சரியில்லை, அதனால் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்வதாக சொல்லி டெம்போ டிராவலில் கூட்டிச்சென்று விட்டார்கள். பின்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வெங்கடேசன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக CBCID காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். வெங்கசேடன் எதனால் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள் என்று எனக்குத் தெரியாது. வெங்கடேசனை கைத்தாங்கலாக கொண்டு சென்றார்கள் அதைத்தான் பார்த்தேன். கைத்தாங்கலாக க்ரைம் SI முனியசாமி, அசோக்குமார், நீதி, தெய்வேந்திரன், கோதண்டராமன், கிருஷ்ணவேலு ஆகியோர் தூக்கிவந்தார்கள். மேற்படி கோதண்டராமன், கிருஷ்ணவேலு, ஞானசேகரன் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். கொண்டு வரப்பட்ட வெங்கடேசனுக்கு Shadow ஆக காவலர்கள் அசோக்குமார், நீதி, தெய்வேந்திரன் ஆகியோர் இருந்தார்கள். காலை 07.30 மணியளவில் கோதண்டராமன், கிருஷ்ணவேலு, ஞானசேகரன் ஆகிய மூவரும் வந்து Shadow பார்த்த காவலர்களை மாற்றினார்கள். வெங்கடேசனை மேற்படி கோதண்டராமன், கிருஷ்ணவேலு, ஞானசேகரன் ஆகிய மூவரும் விசாரித்தார்களா என்றால் இல்லை.

காலையில் ரோல்கால் நடத்த வேண்டியிருந்ததால் மேற்படி வெங்கடேசனை கீழ் தளத்தில் இருந்து மேல் தளத்திற்கு அழைத்து சென்றார்கள். அப்போது வெங்கடேசன் நல்ல நிலையில் தான் அழைத்து சென்றார்கள். அப்போது எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் L&O சார்பு ஆய்வாளர் திரு. ஆறுமுக நைனார். க்ரைம் SI முனியசாமி எமனேஸ்வரம் காவல் நிலையத்திற்கு மறுபடியும் வந்த நேரம் எனக்குத் தெரியாது. என்னை வழக்கு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:26 +0530

சம்ந்தமாக பரமக்குடி நீதித்துறை நடுவர் விசாரித்தார்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 03.10.2012 ம் தேதி காலை 07.00 மணிக்கு கோதண்டராமன், கிருஷ்ணவேலு, ஞானசேகரன் ஆகியோர் shadow–ல் இருந்த தெய்வேந்திரன், நீதி, அசோக்குமார் ஆகியோரை மாற்றிவிட்டு, மேற்படி கோதண்டராமன், கிருஷ்ணவேலு, ஞானசேகரன் ஆகியோர் வெங்கடேசனை விசாரிக்க ஆரம்பித்தார்கள் என்றும், பின்பு லத்தி கம்பால் அடிக்க ஆரம்பித்தார்கள் என்றும், நான் அவர்களை அடிக்க வேண்டாம் என்று தடுத்தேன் என்றும், நான் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்றும் CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

தொடர்ந்து வெங்கடேசனை காவல் நிலைய கீழ்தளத்தில் வைத்து கோதண்டராமன், கிருஷ்ணவேலு, ஞானசேகரன் ஆகியோர் வெங்கடேசனை லத்திக்கம்பால் தலை, மார்பு, வலது இடது தோள்பட்டைகள், விதைப்பை, கை, கால், தொடைகள் மற்றும் உடம்பில் பல இடங்களில் அடித்தார்கள் என்றும், அவர் வலி தாங்க முடியாமல் கத்தினார் என்றும், நாங்கள் அவர்களை தடுத்தோம் என்றும், CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

உடனே வெங்கடேசனை மேல்மாடிக்கு கொண்டுசென்றுவிட்டார்கள் என்றும், உடனே என்னுடன் இருந்த தலைமைக்காவலர் நாகநாதன், சார்பு ஆய்வாளருக்கு போன்செய்து க்ரைம் கேஸில் உள்ள வெங்கடேசனை, க்ரைம் பார்ட்டியினர் முறையில்லாமல் அடித்து



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.16 15:38:28 +0530

விசாரிக்கின்றனர், ஏதாவது நடந்துவிடும், உடனே வாங்க என்று தகவல் சொன்னார் என்று CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பின்பு காலை 08.45 மணியளவில் க்ரைம் பிரிவு சார்பு ஆய்வாளர் திரு.முனியசாமி வந்து, காவல் நிலைய மேல்மாடிக்கு சென்றார் என்றும், அப்போது மேல்மாடியில் வைத்து வெங்கடேசனை அடித்து விசாரணை செய்யும் சத்தமும், வெங்கடேசனின் அலறல் சத்தம் கேட்டது என்றும், அந்த சமயத்தில் மேல்மாடியில் க்ரைம் பிரிவு சார்பு ஆய்வாளர் முனியசாமி, ஆஜர் எதிரிகளான ஞானசேகரன், கோதண்டாராமன், கிருஷ்ணவேலு ஆகிய நால்வரை தவிர வேறு எந்த குற்றப்பிரிவு காவலர்களும் இல்லை என CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

காலை சுமார் 09.00 மணியளவில் எங்கள் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார் காவல் நிலையத்திற்கு வந்து, எங்களிடம் விவரம் கேட்டுவிட்டு மேல்மாடிக்கு சென்று பார்த்துவிட்டு யார் இவர், இங்கே ஏன் வைத்து அடித்துக்கொண்டிருக்கிறீர்கள், உடனடியாக அவரை அழைத்து சென்றுவிடுங்கள் என்று சத்தம் போட்டார் என்றும், அதற்கு க்ரைம் பிரிவு சார்பு ஆய்வாளர் முனியசாமி உங்கள் வேலையை பாருங்கள் என்று சத்தம் போட்டார் என்றும், உடனே சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார் கீழே இறங்கிவந்துவிட்டார் என்றும், அவ்வாறு மேலே சத்தம் போட்டு கொண்டிருந்தது கீழே இருந்த எங்களுக்கும் கேட்டது என்றும் CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

அன்று மதியம் 12.30 மணியளவில் குற்றப்பிரிவு போலிசார் அடித்து விசாரித்த வெங்கடேசன் என்பவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதாக குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் திரு.முனியசாமி தலைமையில் ஆஜர் எதிரிகள் வெங்கடேசனை தோளில் கை போட்டுக்கொண்டு கைத்தாங்கலாக கீழே இறக்கி



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.16 15:38:30 +0530

வந்தனர் என்றும், மற்ற குற்றப்பிரிவு காவலர்கள் பின்னால் வந்தனர் என்றும் இதை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், குற்றப்பிரிவு போலிசார் எல்லோரும் சேர்ந்து அழைத்து வந்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அழைத்து வந்த போது வெங்கடேசன் க்ரைம் பிரிவு சார்பு ஆய்வாளர் முனியசாமியின் பொறுப்பில்தான் இருந்தார் என்றால் சரிதான். பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்த போது, அன்று காலை 10.00 மணிக்கு காவல் ஆய்வாளர் சுபாஷ் அவர்கள் காவல் நிலையம் வந்து மேலே உள்ள அறைக்கு சென்றார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதே போன்று சுமார் 12.00 மணிக்கு க்ரைம் டீம் வெங்கடேசனை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறி கூட்டிச்சென்றனர் என்று பரமக்குடி நீதித்துறை நடுவர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்றைய தினம் பிற்பகல் 01.00 மணிக்கு எனது Duty முடிவடைந்தது என்றால் சரிதான்.

எனது முதன்மை விசாரணையில் நான் க்ரைம் டீமுடன் ஆஜர் எதிரிகளும் சேர்ந்து கைத்தாங்கலாக வெங்கடேசனை அழைத்து சென்றதாக ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:32 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .